ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1419/3 - 2005 නොවැම්බර් 14 වැනි සඳුදා - 2005.11.14

*1419/3 ஆம் இலக்கம் - 2005 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கை நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பு

*இலங்கை சன நாயக சோசலிசக் குடியரசின் 1988, யூன் மாதம் 7 ஆந் திகதிய 509/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட 1988, மே மாதம் 27 ஆந் திகதிய பிரமாணக் குறிப்புக்குப் பதிலாக பின்வரும் இலங்கை நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பு பதிலீடு செய்யப்படுகின்றது.*

*அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,*

*எச். டி. எல். குணவர்த்தன,*
*செயலாளர்,*
*ஆரசாங்க சேவை ஆணைக்குழு.*

*அரசாங்க சேவை ஆணைக்குழு,*
*இல. 46, வொக்ஷொல் வீதி,*
*கொழும்பு 2*
*2005, ஒற்றோபர் 28.*

*1. **நடைமுறைத் திகதி**.- 3 ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள சம்பள அளவுத் திட்டங்கள் 2005.01.01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்துவதன் கீழ் 1988, யூன் மாதம் 7 ஆந் திகதிய 509/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட 1988, மே மாதம் 28 ஆம் திகதிய இலங்கை நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பு மற்றும் இடையிடையே இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அந்தப் பிரமாணக் குறிப்புக்கு இடையிடையே செய்யப்பட்ட திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கமைய எடுக்கப்பட்ட அல்லது அதன் கீழ் எடுக்கப்பட்டதாக கருதப்பட்ட நடவடிக்கை எதையேனும் பாதியாதவாறு இப் பிரமாணக் குறிப்பு 2005, சனவரி மாதம் 1 ஆம் திகதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.*

*2. **வரைவிலக்கணம்**.- பயிலுநர் அலுவலர் என்ற சொற்றொடர் இப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளின் கீழ் சேர்த்துக் கொள்ளப்பட்டு பயிலுநர் பயிற்சி பெறும் நபரொருவர் எனப் பொருள்படும்.*

*"வர்த்தமானப் பத்திரிகை" என்ற சொற்றொடர் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை எனப் பொருள்படும்.*

*"சேவை பிரமாணம்" என்ற சொற்றொடர் இலங்கை நிர்வாக சேவை பிரமாணத்தை குறிக்கும்.*

*"விதித்துரைத்த திகதி" என்ற சொற்றொடர் இப் பிரமாணக் குறிப்பு நடைமுறைப்பட ஆரம்பிக்கும் திகதியை குறிக்கும்.*

"அரசாங்க சேவை ஆணைக்குழு அல்லது அ. சே. ஆ. கு." என்ற சொற்றொடர் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 54 ஆம் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நியமிக்கப்படும் அரசாங்க சேவை ஆணைக்குழுவை குறிக்கும்.

"உரிய துறை" என்ற சொற்றொடர் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு துறையை குறிக்கும்.

"செயலாளர்" என்ற சொற்றொடர் அரசாங்க நிர்வாக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சின் செயலாளர் எனப் பொருள்படும்.

"சேவை" என்ற பதம் இலங்கை நிர்வாக சேவை எனப் பொருள்படும்.

"இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் அல்லது இ. அ. நி. நி." என்ற சொற்றொடர் 1982 ஆம் அண்டு 9 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தை குறிக்கும்.

3. **அமைவு, சம்பள அளவுத் திட்டம் மற்றும் பதவியணி :**

(1) இச்சேவையானது பின்வரும் வகுப்புகளில் எவ்வகுப்பிலேனும் நியமனம் செய்யப்படும் அரச அலுவலர்களைக் கொண்டிருக்கும் :-

* விசேட தரம் :
ஆண்டு சம்பள அளவுத் திட்டம் : ரூபா 3,45,600 - 8 x 12,360 - ரூபா 4,44,480

* வகுப்பு I
ஆண்டு சம்பள அளவுத் திட்டம் : ரூபா 2,76,540 - 10 x 11,880 - ரூபா 3,95,340

* வகுப்பு II
ஆண்டு சம்பள அளவுத் திட்டம் : ரூபா 2,14,980 - 10 x 7,740 - 5 x 8,580 - ரூபா 2,73,360

* வகுப்பு III
ஆண்டு சம்பள அளவுத் திட்டம் : ரூபா 1,57,500 - 15 x 3,780 - ரூபா 2,14,200

1 ஆம் வினைத்திறன்காண் தடை - வகுப்பு III இல் 3 வருடங்கள் பூர்த்தியாவதற்கு முன்

2 ஆம் வினைத்திறன்காண் தடை - வகுப்பு III இல் 6 வருடங்கள் பூர்த்தியாவதற்கு முன்

(2) அங்கீகரிக்கப்பட்ட பதவியணி பின்வருவனவாதல் வேண்டும் :-

| | |
|---|---|
| (அ) விசேட தரம் | 200 |
| (ஆ) வகுப்பு I | 507 |
| (இ) வகுப்பு II | 635 |
| (ஈ) வகுப்பு III | 1,059 |

**குறிப்பு:-** அரச சேவையின் தேவைகளுக்கேற்ப அவ்வப்போது இந்தப் பதவியணி வித்தியாசப்படலாம்.

(3) வகுப்பு III க்காக செய்யப்படும் ஆட்சேர்ப்பு தவிர ஏதேனுமொரு வகுப்புக்கு அல்லது தரத்திற்கு ஏதேனுமொரு ஆண்டில் நியமிக்கப்பட வேண்டிய/ தரமுயர்த்தப்பட வேண்டிய எண்ணிக்கை ஆவது முற்பட்ட ஆண்டின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கும் அவ்வாண்டின் யூன் மாதம் 30 ஆம் திகதிக்கும் நிலவிய வெற்றிட எண்ணிக்கை ஆகும். வகுப்பு III க்கு ஆட்சேர்க்கும் போது ஏதேனுமொரு ஆண்டில் நியமிக்கப்பட வேண்டிய எண்ணிக்கை ஆவது அவ்வாண்டின் யூன் மாதம் 30 ஆந் திகதி நிலவிய வெற்றிட எண்ணிக்கையாகும்.

4. **நியமன முறை.-** சேவையின் எந்த வகுப்புக்கு செய்யப்படும் நியமனமாக இருப்பினும் இப்பிரமாணத்தில் காட்டப்பட்டுள்ள ஒழுங்கு முறையின் கீழ் மட்டுமே செய்ய வேண்டும்.

5. **போட்டிப் பரீட்சை மூலம் வகுப்பு III க்கான ஆட்சேர்ப்பு.-** வகுப்பு III க்கு ஆட்சேர்க்கப்படுவது போட்டிப் பரீட்சைகளின் மூலம் மட்டுமாகும் இப் பரீட்சை வருடாந்தம் நடாத்தப்படும்.

(1) சேவையின் வகுப்பு III இல் உள்ள வெற்றிடங்களில் 80% கான ஆட்சேர்ப்புகள் சேவை பிரமாணக் குறிப்பின்படி பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் பேரில்

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் செய்யப்படும். இந்தப் பரீட்சை விபரங்கள் பின்னிணைப்பு “அ” வில் தரப்பட்டுள்ளன

(அ) எவரேனும் நபரொருவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையடைவதாயின் அவர்,

(i) இலங்கை பிரசை ஆதல் வேண்டும்.

(ii) பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரி ஆதல் வேண்டும்

(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியில் 28 வயதை அடையாது இருக்க வேண்டும். (இந்த பிரமாணம் நடைமுறைப்படும் திகதி தொடக்கம் 3 வருட காலத்திற்காக இவ்வயதெல்லை 30 வருடங்கள் ஆகும்.)

(iv) நல்லொழுக்கத்துடன் சிறந்த தேகாரோக்கியம் உடையவராக இருக்க வேண்டும்.

(2) சேவையின் வகுப்பு III இல் உள்ள வெற்றிடங்களில் 20% க்கான ஆட்சேர்ப்பு சேவை பிரமாணத்தின்படி பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை பெறுபேறுகளின் பேரில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் இப் பரீட்சை பற்றிய விபரங்களும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக தகைமை அடைகின்ற சேவைகளைப் பற்றிய விபரங்களும் பின்னிணைப்பு (ஆ) மற்றும் (ஆ1) இல் காட்டப்பட்டுள்ளது.

(அ) எவரேனும் நபரொருவர் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு தகைமைகளை அடைவதற்கென்றால் அவர்,

(i) பின்னிணைப்பு ஆ1 இல் காட்டப்பட்டுள்ள ஏதேனுமொரு சேவையில் 10 வருட முனைப்பான சேவை காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். பட்டதாரிகளுக்காக முனைப்பான சேவைக்காலம் 5 வருடங்கள் ஆதல் வேண்டும்.

(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு உடன் முந்திய கடந்த ஐந்தாண்டுக் காலத்திற்குள் பெறவேண்டிய எல்லா வேதனவேற்றங்களையும் உழைத்துப் பெற்றிருக்க வேண்டியதுடன் தண்டனைகளுக்கு ஆளாகாதவராக இருக்க வேண்டும்.

6. **தகைமைகள் பற்றிய எல்லைகள் :**

(1) சேவை பிரமாணத்தின் 5 (1) அல்லது 5 (2) இன் பிரகாரம் போட்டிப் பரீட்சையின் பொருட்டு இரண்டு முறைகளுக்கு மேல் தோற்றுவதற்கு ஒருவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

(2) ஏதேனுமொரு சமயக் கிளையில் மதகுரு அந்தஸ்த்தில் உள்ள நபர் எவரும் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

7. **விண்ணப்பிக்கும் முறை.**– பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பிக்கும் முறை அரச வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படும்.

8. **தகைமை பெறும் திகதி**.– சேவையில் நியமனம் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக வேண்டிய தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக் கொள்ளப்படுவது விண்ணப்பதாரர் :

(1) மேலே 5 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை விண்ணப்ப முடிவுத் திகதியில் எல்லா அம்சங்களிலும் பூர்த்தி செய்திருந்தால் மட்டுமாகும்.

(2) பட்டம் ஒரு தகைமையாகத் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் பட்டச் சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி விண்ணப்ப முடிவுத் திகதி அல்லது அந்தத் திகதிக்கு முற்பட்ட ஒரு திகதியாக அமையுமிடத்து மட்டுமாகும்.

9. **பயிற்றுவித்தல்.**– பயிற்சியானது தொடர்ச்சியாக நடாத்திச் செல்லப்படுகின்ற செயல்நடையாகும். சேவையில் சேர்கின்ற அலுவலர்களுக்கு சேவையின் தொழில்சார் அனுபவமும் நிர்வாகப் பொறப்புகளும் அத்துடன் அவற்றின் தொழில்சார் அபிவிருத்தி தேவைகளும் அதன் மூலம் வழங்கப்படும். பயிற்சியானது பயிலுநர் பயிற்சி மற்றும் சேவை நிலையப் பயிற்சி என இரு விதமாக அமைகின்றது

*(1) பயிலுநர் பயிற்சி :*

(அ) பயிலுநர் பயிற்சியானது செயலாளரால் ஏற்பாடு செய்யப்பட்டு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் அல்லது வேறு உயர் பயிற்சி அல்லது உயர்கல்வி நிறுவனமொன்றினால் நடாத்தப்படுகின்ற அரச நிர்வாகம் பற்றிய டிப்ளோமா சான்றிதழை கொண்ட ஒரு பாடநெறியாகும். சேவையில் நிரந்தரப்படுத்துவதற்காக இப் பய்றிசிச் சான்றிதழை பெற்றுக் கொள்ள வேண்டும்.

(ஆ) பயிற்சிக் காலத்தினுள் பயிலுநர் அலுவலர்களுக்கு முகாமைத்துவ முறைகளுடன் நிபுணத்துவங்களை பெறக்கூடிய வகையில் உதவியளிக்கப்படும் இப் பயிற்சியின் மூலம் அவர்களுக்கு சிங்களம், தமிழ் ஆகிய அரச கரும மொழிகள் இரண்டிலும் இணைப்பு மொழியான ஆங்கில மொழியிலும் தேர்ச்சியைப் பெற முடிகிறது. அதேபோன்று தாம் முகாமையாளர்களாக செயலாற்ற உத்தேசிக்கின்ற சமுக பொருளாதார காலச்சார சுற்றாடலினுள் ஏற்படும் அபிவிருத்தி நிலைமைகள் பற்றி அவர்களுக்கு விளக்கப்படும்.

(இ) பயிற்சிக் காலத்தினுள் பயிலுநர் அலுவலர்கள் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்திற்கு இணைப்புச் செய்யப்படுவதுடன் அவர்கள் அந் நிறுவனத்தின் கண்காணிப்புக்கும் கட்டுப்பாட்டிற்கும் கீழ்ப்படுவர்.

(ஈ) 5 (1) ஆம் உட்பிரிவில் காட்டப்பட்டுள்ள முறையின் வாயிலாக சேவையில் சேர்கின்ற பயிலுநர் அலுவலரொருவர் பயிலுநர் பயிற்சி முடிந்த பின் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தி பெறாவிட்டால் அந்த அலுவலரின் சேவையை முடிவுறுத்த வேண்டும். 5 (2) ஆம் உட்பிரிவில் காட்டப்பட்டுள்ள முறையின் வாயிலாக சேவையில் சேர்ந்த பயிலுநர் அலுவலரொருவர் பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தி பெறாவிட்டால் அவர் அரச சேவையில் முன்னர் வகித்த பதவிக்கு மீண்டும் அனுப்பப்பட வேண்டும்.

*(2) சேவை நிலையப் பயிற்சி :*

(அ) சேவை நிலையப் பயிற்சியின் மூலம் அலுவலர்களுக்கு தொடர்ந்தும் தொழில்சார் அனுபவம் வழங்கப்படும். சேவையின் நான்கு பிரிவுகளுக்கு அளிக்கப்படுகின்ற நிர்வாகப் பொறுப்புகளும் அவற்றின் தொழில்சார் அபிவிருத்தி தேவைகளும் இந்தப் பயிற்சி நெறியின் மூலம் வழங்கப்படும் :

(i) **முன்வரிசை முகாமை மட்டத்திலான பயிற்சி தேவைகள்.-** இப்பயிற்சி வகுப்பு III இல் உள்ள அலுவலர்களுக்கு ஏற்புடையதாகும். இது செயலாளரால் அங்கீகரிக்கப்படுகின்ற ஐந்து பாட நெறிகளை கொண்டிருக்கும்

(ii) **மத்திய முகாமை மட்டத்திலான பயிற்சி தேவைகள்.-** இப்பயிற்சி வகுப்பு II இல் உள்ள அலுவலர்களுக்கு ஏற்புடையதாகும். இது செயலாளரால் அங்கீகரிக்கப்படுகின்ற மூன்று பாட நெறிகளை கொண்டிருக்கும்.

(iii) **சிரேஷ்ட முகாமை மட்டத்திலான பயிற்சித் தேவைகள்.-** இப்பயிற்சி வகுப்பு I இல் உள்ள அலுவலர்களுக்கு ஏற்புடையதாகும். இது செயலாளரால் அங்கீகரிக்கப்படுகின்ற மூன்று பாட நெறிகளை கொண்டிருக்கும்.

(iv) **கொள்கை மட்டத்திலான பயிற்சித் தேவைகள்.-** இது விசேட தரத்தில் உள்ள அலுவலர்களுக்கு ஏற்புடையதாகும்.

(அ) இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த எல்லா அலுவலர்களும் ஒரு பஞ்சாங்க வருடத்தினுள் குறைந்த பட்சம் இரு வாரங்களாவது பயிற்சிப் பாடநெறிகளை கற்க வேண்டும்.

(இ) மேற்படி பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சிப் பாட நெறிகளுக்கு மேலதிகமாக சேவைக்கு உரிய பாடங்கள் தொடர்பில் செயலாளர் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் மூலம் பயிற்சி பட்டறைகள் கருத்தரங்குகள் மற்றும் உரைகள் என்பவற்றை நடாத்துவதற்கு உரிய ஏற்பாடு செய்வார்.

*10.* **உறுதிப்படுத்தல்** *:*

(1) திறந்த போட்டிப் பரீட்சை பெறுபேறுகளின் பேரில் சேவையின் வகுப்பு III க்கு நியமனம் செய்யப்படும் அலுவலரொருவர் மூன்று வருட காலத்திற்கு தகுதிகாண் நிலையில் வைக்கப்படுவார். அவர் முதலாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்து மொழித் தேர்ச்சியை பூர்த்தி செய்து தகுதிகாண் நிலைக் காலத்திற்குள் வேலை மற்றும் நடத்தையை திருப்திகரமாக நடாத்தி வந்திருந்தால் தகுதிகாண் நிலைக்கால இறுதியில் இலங்கை நிருவாக சேவையில் உறுதிப்படுத்தப்படுவார்.

(2) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை பெறுபேறுகளின் பேரில் வகுப்பு III க்கு நியமனம் செய்யப்படும் அலுவலரொருவர் ஒரு வருட சோதனை காலத்திற்கு உட்படுத்தப்பட்டு நியமிக்கப்படுவதுடன் சோதனை காலத்தினுள் அவரின் கடமைகளும் நடத்தையும் திருப்திகரமாக நடாத்திச் செல்லப்பட்டிருப்பின் சோதனை கால இறுதியில் இ. நி. சேவையில் உறுதிப்படுத்தப்படுவார். இந்த அலுவலர்கள் நிர்வாக சேவைக்கு நியமனம் செய்யப்பட்ட பின்னராக பெறுகின்ற மூன்றாவது வேதனவேற்றத்தை உழைத்துப் பெற முன் முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சையில் சித்தி பெற வேண்டும.

11. **மொழித் தேர்ச்சி :**

(1) சேவையில் நியமிக்கப்பெற்ற அலுவலர் ஒருவர் நியமனத் திகதி முதல் ஆறு வருடங்களுக்குள் இரண்டாம் மொழி பற்றிய பரீட்சை ஒன்றில் சித்தி பெற வேண்டும் அலுவலர் ஒருவர் க. பொ. த. (சா/த) பரீட்சையில் உரிய மொழிப் பாடத்திற்கான விருப்பத்திற்குரிய மொழி வினாத்தாளில் சித்தி பெறுவதன் மூலம் அல்லது அவர் இரண்டாம் மொழிப்பரீட்சையில் சித்தி பெறுவதன் மூலம் உரிய பாடத்தை சித்தி பெற வேண்டிய தேவையிலிருந்து விலக்களிக்கப்படுவார்.

(2) சிங்கள மொழி மூலம் சேவையில் நியமிப்பதற்கு தகைமையடைந்துள்ள ஓர் அலுவலர் விடயத்தில் இரண்டாம் மொழி தமிழ் மொழியாவதுடன் தமிழ் மொழி மூலம் சேவையில் நியமிப்பதற்கு தகைமையடைந்துள்ள ஓர் அலுவலர் விடயத்தில் இரண்டாம் மொழி சிங்கள மொழியாகும். ஆங்கில மொழி மூலம் சேவையில் நியமனம் பெறுவதற்கு தகைமையுடைய அலுவலர் ஒருவர் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகள் பற்றிய பரீட்சையில் சித்தி பெற வேண்டும்.

12. **வினைத்திறன்காண் தடை :**

(1) சேவையின் வகுப்பு III க்கு நிமிக்கப்படும் அலுவலரொருவர் சேவையில் நியமிக்கப்பெற்ற திகதியில் இருந்து மூன்று வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடை பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். இப்பரீட்சைக்குரிய பாடத்திட்டம் பின்னிணைப்பு "இ" இல் காட்டப்பட்டுள்ளது.

(2) சேவையின் வகுப்பு II இல் உள்ள அலுவலரொருவர் சேவையில் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து 6 வருட காலத்திற்குள் இரண்டாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தி பெற வேண்டும். இப் பரீட்சைக்கான பாடத்திட்டம் பின்னிணைப்பு "ஈ" இல் காட்டப்பட்டுள்ளது.

**குறிப்பு:-** விணைத்திறன்காண் தடைப்பரீட்சைகள் ஒரு வருடத்திற்கு இரு தடவைகள் நடாத்தப்படும்.

13. **வகுப்பு II க்கு நியமனம் செய்தல் :**

(1) இப் பந்தியின் (2) அல்லது 3 (அ) வின் கீழ் வகுப்பு II க்கு தரமுயர்த்துவதற்காக எவரேனும் அலுவலர் ஒருவரால் பின்வரும் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும் :-

(i) விதித்துரைக்கப்பட்ட திகதிக்கு முதலாம் இரண்டாம் வினைத்திறன்காண் தடைகளை சித்தி பெற்றிருத்தல்.

(ii) இரண்டாம் மொழியில் சித்திபெற வேண்டிய தேவையை பூர்த்தி செய்திருத்தல்.

(iii) அவர் தரமுயர்வுக்காக தகைமை பெறுவதற்கு உடன் முந்திய ஐந்து வருட காலப் பகுதிக்குள் எல்லா ஆண்டேற்றங்களையும் உழைத்து பெற்றிருத்தல்.

(iv) அவர் தரமுயர்வுக்காக தகைமை பெறுவதற்கு உடன் முந்திய ஐந்து வருட காலப் பகுதிக்குள் இழைத்த ஏதேனும் தவறுக்காக ஒழுக்காற்று தண்டணைக்கு ஆளாகாது இருத்தல்.

(v) துணைப் பந்தி 9(2) அ (1) இன் கீழ் விதித்துரைக்கப்பட்ட பயிற்சி நெறி எண்ணிக்கையை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.

(vi) அவர் வகுப்பு II இன் தரமுயர்வுக்காக தகைமைபெற்ற திகதிக்கு உடன் முந்திய 5 வருட காலப் பகுதிக்குள் அவரின் ஆண்டு செயலாற்றுகை தரங்கணிப்பு அறிக்கைகளில் "திருப்திகரமான" மட்டத்தை பார்க்க உயர்ந்த செயலாற்றுகை மட்டத்தை அடைந்திருத்தல்.

(2) ஏதேனுமொரு ஆண்டில் சேவையின் வகுப்பு II இல் நிலவுகின்ற வெற்றிடங்களில் 80% க்கான நியமனங்கள் போட்டிப் பரீட்சை ஒன்றின் பெறுபேறுகளின் பேரில் முழுமொத்தப் புள்ளிகளில் 50% க்குக் குறையாத புள்ளிகளை பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரர்களுள் தெரிவு செய்வதன் மூலம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் செய்யப்படும் சேவையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளவர்களும் வகுப்பு III இல் 6 வருடங்களுக்கு குறையாது திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ளவர்களுமான அலுவலர்களுக்கு இது மட்டுப்படுத்தப் பட்டிருக்கும் பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் முறை வர்தமான பத்திரிகையில் வெளியிடப்படும்.

(3) (அ) ஏதேனுமொரு ஆண்டில் சேவையின் வகுப்பு II இல் நிலவுகின்ற வெற்றிடங்களில் 20% க்கான ஆட்சேர்ப்புகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அதற்காக நியமிக்கப்படும் தெரிவுக் குழுவொன்றின் பரிந்துரைகளின் பேரில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் செய்யப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். இறுதித் திகதி அமையும் மாதத்திற்கு உடன் முந்தி ய மாதத்தின் இறுதி திகதிக்கு சேவையின் வகுப்பு III இல் சேவையில் உறுதிப்படுத்தப்பட்டும் அதே வகுப்பில் திருப்திகரமான 10 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்தும் உள்ள அலுவலர் ஒருவர் சேவையின் வகுப்பு II இல் நியமனம் செய்வதற்காக கவனத்திற் கொள்வதற்கு தகைமையுடையவர் ஆவார்.

(ஆ) எவரேனும் அலுவலரொருவர் 13 (3) (அ) துணைப் பந்தியின் பிரகாரம் வகுப்பு IIக்கு தரமுயர்த்துவதற்காக 13 (3) (அ) துணைப் பந்தியில் குறிப்பிட்டுள்ள தேவைகளுக்கு மேலதிகமாக அவர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து/நிறுவனமொன்றில் இருந்து அரசாங்க நிர்வாகம், முகாமை அரச கொள்கை பொருளாதார சமூக அபிவிருத்தி ஆகிய பாடத்துறைகளுக்கு உரிய அல்லது அதற்குச் சமமான தகைமையென அரசாங்க சேவை ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டநிலை பின்படிப்பு பட்ட டிப்ளோமா பாடநெறியொன்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

(4) மேற்படி (13) (1) ஆம் துணைப் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை பூர்த்தி செய்யும் அலுவலர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்களத் தலைவரின் பரிந்துரைகளுடன் தொடர்புடைய அமைச்சின் செயலாளர் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும். அரசாங்க நிர்வாக அமைச்சினால் வெளியிடப்படும் அறிவுரைகளுக்கு அமைவாக விண்ணப்பங்களை தயாரித்துக் கொள்ள வேண்டும்.

14. **வகுப்பு I க்கு நியமனம் செய்தல் :**

(1) சேவையின் வகுப்பு I லான வெற்றிடங்களுக்கு நியமித்தலானது பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்துள்ள சேவையின் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களை தரமுயர்த்துவதன் மூலம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்படும்.

(அ) வகுப்பு II இற்கு குறைந்த பட்சம் திருப்திகரமான ஏழு வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

(ஆ) வகுப்பு I இற்கு தரமுயர்த்துவதற்கு தகைமையடைகின்ற திகதிக்கு உடன் முந்திய ஐந்தாண்டுக் காலப்பகுதிக்குள் அவர் தனது வருடாந்த செயலாற்றுகை தரங் கணிப்பு அறிக்கைகளில் "திருப்திகரமான" மட்டத்தை பார்க்க "உயர்ந்த மட்டத்தை" அடைந்திருத்தல்.

(இ) 9 (2) அ (II) துணைப் பந்தியின் கீழ் உரிய பயிற்சி நெறி எண்ணிக்கையை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.

(ஈ) அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட அரச நிர்வாகம் முகாமை அரச கொள்கை மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்தி ஆகிய பாடத்துறைகளுக்கு உரிய அல்லது அதற்கு சமமான தகைமையென அ. சே. ஆ. குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கலை முதுமாணி அல்லது அதைவிடவும் உயர்ந்த மட்டத்திலான பட்டநிலைபின்படிப்பு பட்டமொன்றை பெற்றிருத்தல்.

(2) அரசாங்க சேவை ஆணைக் குழுவால் நியமனம் செய்யப்படுகின்ற செயலாளரையும் வேறு அமைச்சுச் செயலாளர்கள் இருவரையும் கொண்ட ஒரு தெரிவுக் குழுவால் நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சையொன்றின் மூலம் முதுமுறை மற்றும் திறமை அடிப்படையில் பரிந்துரைப்பதன் பேரில் இவ்வகுப்பிற்கு நியமனம் செய்வதற்காக பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படும். இந்தச் செயற்பாட்டிற்காக நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கையைப் போல் இரு மடங்கிற்கு மேற்படாத வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர் எண்ணிக்கை நேர்முகப்பரீட்சைக்குழுவால் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.